# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19-A, ருக்மினி லட்சுமிபதி சாலை (மார்ஷல் சாலை)
எழும்பூர், சென்னை – 600 008,
தொலைபேசி : ++91-44-28411376 / 28411378 / 28411379
நிகரி: ++91-44-28411377
மின்னஞ்சல்: tnerc@nic.in இணையதளம்: www.tnerc.gov.in

எண். 1 / 2013
நாள் : 02–01–2013

## செய்தி வெளியீடு

ஆணையம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் (தமிழ்நாடு மின்சார வாரியம்) ஒவ்வொரு மின்வட்ட அலுவலகத்திலும் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் உள்ளது என்பது குறித்து மின்நுகர்வோரின் கவனத்தை ஈர்க்கும் வகையில், 2012 ஜுலை மாதத்தில் செய்தி வெளியிட்டது. இதன் பின்னும், அதிக அளவில் மின்நுகர்வோரின் புகார்கள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய அலுவலகத்தில் பெறப்பட்டு வருகிறது. பொதுவாக, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இந்த மின்நுகர்வோர் குறைகளைக் கேட்டு தீர்ப்பதில்லை. இதற்காக, ஒவ்வொரு மின்வட்டம் / மாவட்டத்திலும் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் என்ற தனிப்பட்ட அமைப்பு உள்ளது. மின்நுகர்வோர், புதிய மின்னிணைப்பு பெறுதல், புதிய மின்னிணைப்பு பெறுவதில் காலதாமதம், குறைபாடான மின்னளவிகளை மாற்றுதல், மின்நுகர்வு பட்டியலிலுள்ள பூசல், குறைபாடுகளை களையாதிருத்தல், இதுபோன்ற குறைகளைத் தீர்ப்பதற்காக மின்நுகர்வோர் சம்பந்தப்பட்ட மின்வட்டத்தின் மேற்பார்வை பொறியாளரைத் தலைவராகக் கொண்டு இயங்கும் மின்நுகர்வோர் குறைதீர்மன்றத்தை அணுகலாம். ஒரு மின்வட்டத்திலுள்ள ஒவ்வொரு மின்நுகர்வோர் குறைதீர்மன்றத்திலும் ஒரு தலைவர் மற்றும் 2 உறுப்பினர்கள் உள்ளனர். மின்வட்டத்தின் மேற்பார்வைப் பொறியாளர் குறைதீர்மன்றத்தின் தலைவராக இருப்பார் மற்றும் 2 உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படுவர். இந்த உறுப்பினர்கள் மின்நுகர்வோர் தொடர்பான செயற்பாடுகளிலும் பொதுப்பணிகளிலும் அவர்களுடைய ஈடுபாட்டின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியரால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

முறையீட்டாளரால் இரண்டு மாதங்களுக்குள் பதிலுரை பெறப்படவில்லை என்றால் அல்லது முறையீட்டாளர் மன்றத்தின் முடிவு குறித்து திருப்தியடையவில்லை என்றால், அவர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய அலுவலகத்தில் அமைந்துள்ள மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்யலாம் . ஒன்றுக்கு மேற்பட்ட மன்றத்திற்குப் பொருந்தக்கூடியதாகக் கருதப்படும் பொதுத்தன்மையதான

புகார்கள் மாநில மின்நுகர்வோர் சங்கங்களினால் நேரடியாக மின்குறைதீர்ப்பாளரிடம் எடுத்து செய்யப்படலாம்.

ஒவ்வொரு மின் வட்ட அலுவலகத்திலும் தற்போது மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் இருந்துங்கூட இதுபற்றி மின்நுகர்வோர் அறிந்திருக்க ஏற்பாடு செய்யப்படவில்லை . ஒவ்வொரு மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்திலும் பெறப்பட்டு தீர்வு செய்யப்பட்ட குறைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும். எனவே, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு எதிராக புகார் செய்யவிருக்கிறவர்களுக்கு தெரிவிக்கப்படுவது யாதெனில், குறைதீர்மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளர் ஆகிய இரண்டு அமைப்புகள் வாயிலாக தங்களுடைய குறைகள் தீர்க்கப்படுவதற்கு மேற்சொன்ன வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (தமிழ்நாடு மின்சார வாரியம்), இந்த மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் இருந்துவருவது குறித்து, வெள்ளை நிறமுடைய மின்னளவி அட்டைகள், பட்டியல்கள், விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அவர்களுடைய அறிவிப்பு பலகைகள் ஆகியவற்றில் பரவலாக விளம்பரப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்தந்த மின்வட்டங்களின் மேற்பார்வைப் பொறியாளர்களால் நடத்தப்படும் மாதாந்திர குறைதீர்க்கும் நாள் கூட்டத்தின் வாயிலாகவும் விளம்பரப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பல்வேறு மின்நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் மின்நுகர்வோர் செயல்வினைஞர்கள், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திலுள்ள (தமிழ்நாடு மின்சார வாரியம்) மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் குறித்து மின்நுகர்வோரிடையே விளம்பரப்படுத்தலாம். இந்த மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் முகவரிகள், அந்தந்த மின்வட்டங்களின் மேற்பார்வைப் பொறியாளர்களின் அலுவலக முகவரிகளாகும்.

மாநிலத்தின் மின்நுகர்வோர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் பிற அமைப்புகளுக்கு குறைகளைப் பற்றி எழுதுவதற்குப் பதிலாக மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளர் ஆகிய அமைப்புகளை அணுகி குறைகளைத் தீர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**(சி. குணசேகரன்)**
செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்